Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C. 57/2022** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW8** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் |
| Father/Husband Name | : | முருகேசன் |
| Village | : | சௌராஷ்ட்ரா தெரு, இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | ஹோட்டல் மாஸ்டர் |
| Religion | : | |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.11.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் சௌராஷ்ட்ரா தெருவில் குடியிருந்து வருகிறேன். சமையல் மாஸ்டராக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ராஜேந்திர பிரசாத்தை தெரியும். இறந்துபோன சுந்தரத்தை தெரியும். எதிரிகள் ராஜ்கபூர் மற்றும் சிவாவை தெரியும். நான் வேலை செய்த ஹோட்டலுக்கு பக்கத்தில் ஆட்டோ ஓட்டி வந்தார்கள். கடந்த 06.11.2009 ம் தேதி இரவு 10.15 – 10.30 மணியளவில் இராமநாதபுரம் அப்துல்லா மருத்துவமனைக்கு எதிரில் உள்ள பரமக்குடி புரோட்டா கடையில் புரோட்டா மாஸ்டராக நான் பணிபுரிந்தேன். என்னுடன் அ.சா.7 ஜெயக்குமார், கடை உரிமையாளர் முரளி

ஆகியோர் இருந்தோம். அப்போது இரவு 10.15 – 10.30 மணியளவில் இவ்வழக்கில்இறந்துபோன சுந்தரமும், அ.சா.1 ராஜேந்திரபிரசாத்தும் நான் பணி புரிந்த புரோட்டா கடைக்கு சாப்பிட இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்கள் இருவரும் சாப்பாடு கேட்டார்கள். நாங்கள் இல்லை என்று சொன்னோம். அப்போது அருகில் இருந்த எதிரிகள் சிவாவும், ராஜ்கபூரும் தகாத வார்த்தைகளால் ஏன் பைக்கில் இடிக்கிற மாதிரி வருகிறீர்கள் என ராஜேந்திர பிரசாத்தையும், சுந்தரத்தையும் பேசினார்கள். ராஜேந்திரபிரசாத் ஏன் திட்டுகிறீர்கள் என்று கேட்டார். அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது, அந்த சூழ்நிலையில் இறந்துபோன எதிரி ராஜ்கபூர் பக்கத்தில் இருந்த ரீப்பர்கட்டையை எடுத்து ராஜேந்திரபிரசாத்தின் தலையில் அடித்தார். இறந்துபோன சுந்தரம் பேசிக்கொண்டிருக்கும்போது ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது அவரையும் எதிரிகள் இருவரும் தள்ளிவிட்டு மாறிமாறி ரீப்பர்கட்டையால் அடித்தார்கள். அவ்வாறு அடித்ததால் சுந்தரத்தில் மண்டை பிளந்து மூளை தெறித்துவிட்டது, உடனே நாங்கள் பயந்து கொண்டு கடையை அடைத்துவிட்டு சென்றுவிட்டோம். நாங்கள் காவல் நிலையத்திற்கு சம்பவம் குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை. மறுநாள் போலிசார் என் வீட்டிற்கு என்னை தேடிவந்து சம்பவம் பற்றி கேட்டார்கள். கேட்டபோது நான் மேலே சொன்னவாறு கூறினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.